**Crl.Misc.39**

**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**SHOLINGANALLUR**
**DEPOSITION OF WITNESS**

**Calender :**
**Miscellaneous : CC.No.12/2025**
**Preliminary Register :**
**Police Station : Kanathur PS**

**Deposition of witness for :LW6/PW5**
**:**

**Name : Abdul Muneer**
**:S/o. Abdul Ajtez**

**Village :**
**Taluk :**
**Caste :**
**Calling :**
**Religion :**
**Age :**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.10.2025**

**(எதிரி ஆஜர் , எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

அரசு தரப்பு முதல் விசாரணை

1. நான் கானத்தூர் தொல்காத்தம்மன் கோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் அமித் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.02.2024 தேதியன்று பகல் 12 மணியளவில் நானும் எனது சகோதரர் அப்துல் சாஹித் என்பவரும் கானத்தூரில் இருந்து கோவளத்திற்கு தர்காவிற்கு சென்று கொண்டிருந்த பொழுது போட் ஹவுஸ் அருகே ஆஜர் எதிரியை கானத்தூர் காவல் ஆய்வாளர் விசாரித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது ஆஜர் எதிரி தங்கச் சங்கலியை தான் பறித்ததாகவும் அதை காவல் ஆய்வாளருக்கு எடுத்து ஆஜர் செய்த பொழுது எங்களை காவல்

ஆய்வாளர் சாட்சியாக இருக்கும் படி கேட்டுக் கொண்டதற்கு இணங்க சாட்சி கையொப்பம் செய்தோம்.

2. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அதில் எழுதி உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடைய தான். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள என்னுடைய கையெழுத்து மட்டும் அ த சா ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகசரில் உள்ள என்னுடைய கையெழுத்து மட்டும் அ த சா ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை;</u>

1. நான் முதுகலை பட்டம் பெற்று தற்பொழுது பிஎச்டி அமித் பல்கலைக்கழகத்தில் படித்து வருகிறேன். இவ்வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் எனது உறவினர்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னை போட் ஹவுஸ் அருகே விசாரணை செய்தனர். போலீசார் ஏற்கனவே தயார் செய்து வைத்த ஆவணத்தில் கையொப்பம் கேட்டதால் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. என் முன்னிலையில் தான் கைப்பட எழுதினார்கள்.

2. அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் இரண்டு கையொப்பம் செய்தேன். இரண்டு கையொப்பங்களும் கைப்பட எழுதியதில் கையொப்பம் செய்தேன் என்றால் டைப் செய்ததில் கையொப்பம் செய்தேன். ஒரு ஆவணம் கையால் எழுதப்பட்டது. மற்றொரு ஆவணம் டைப் செய்யப்பட்டது. அதில் கையொப்பம் செய்தேன். அதில் எந்த ஆவணம் டைப் செய்யப்பட்டது எந்த ஆவணம் கையால் எழுதப்பட்டது என்ற விவரத்தை சொல்ல முடியுமா என்றால் முடியாது.

**<u>மறுவிசாரணை :</u>** இல்லை

Sd/-M.N.ராஜநந்திவர்மசிவா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
சோழிங்கநல்லூர்.